Registered as a NewsPaper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆடி 28 | (12 - 08 - 1992) | புதன்கிழமை | ஓசை 176

## அந்நியச் செலவாணி கட்டுப்பாட்டில் தளர்வு

இலங்கை மத்திய வங்கி பல்வேறு நோக்கங்களுக்காக அந்நிய செலவாணி கட்டுப்பாட்டு விதிகளை உடனடியாக தளர்த்துவதென தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தின் தாராள பொருளாதாரச் கொள்கைக்கு அமையவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வெளிநாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி அதிகரிப்பை அடுத்தே இவ் அதிகரிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய உபகண்டம் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கு செல்லும் இலங்கையர்கள் கூடுதலாக 50 சத வீதநாணய மாற்றை எடுத்துச் செல்லஅனுமதிக்கப்படுவர் இதன்படி வயதுவந்த ஒருவர் வருடத்திற்கு 7500 அமெரிக்க டாலரை எடுத்துச் செல்ல முடியுப்சிறுவர் ஒருவரின் சார்பில் வருட மொன்றிற்கு 3850 டாலர் எடுத்துச் செல்ல முடியும். (4ஆம பக்கம்பார்க்க)

# யாழ். குடாநாடு மீதான படையெடுப்பு

# தொடர்வதா? ஒத்திப்போடுவதா?

## எறிகணை வீச்சு

(குருநகர்)

பூநகரி - மண்ணித்தலையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் காலை கண்மூடித்தனமாக எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

எறிகணைகள் பூநகரி பந்தலடிப் பகுதிக் கடல் கரையோரங்களில் வீழ்ந்து வெடித்தன.

அப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டு நின்ற மீனவர்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ராணுவ உயர்மட்டம் மந்திராலோசனை

(கொழும்பு)

யாழ். குடாநாட்டின்மீது உடனடியாகத் தாக்குதலை நடத்துவதா? அல்லது ஒத்திப்போடுவதா? என்பது குறித்து அரச, இராணுவ வட்டாரங்களில் தீவிர மந்திராலோசனை இடம்பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை இராணுவ அதிகாரிகளில் ஒரு தரப்பினர் தாக்குதலை உடன் நடத்த வேண்டும் என வற்புறுத்துவதாகவும்,ஒரு பகுதியினர் தாக்குதல் காலவரையின்றி ஒத்திப்போடப்பட வேண்டும் என வற்புறுத்துவதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' தெரிவித்தது.

யாழ். குடா நாட்டின்மீது இறுதித் தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்த வேளையில் இவற்றிற்குபொறுப்பாகவிருந்த இராணுவத்தளபதிகள் அனைவரும் புலிகளின் தாக்குதலுக்குப் பலியானதை தொடர்ந்தே இந்நிலை உருவாகியுள்ளது.

யாழ். குடாநாட்டின் மீது தாக்குதலைத்தொடுக்கவேண்டும் என வற்புறுத்தும் தரப்பினர் தாக்குதல்கள் தாமதமானால் இராணுவத்தினர் மனச்சோர்வடைவர் என்றும், அதேவேளை புலிகள் தம்மை தயார்படுத்திக்கொள்ள கால அவகாசம் கொடுத்ததாக அமையும் எனவும் வற்புறுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தாக்குதலை ஒத்திப்போட வேண்டுமெனத் தெரிவிக்கும் அதிகாரிகள் அவசரப்பட்டு ஆரம்பிக்கும் தாக்குதல் தோல்வியில் முடியுமானால் அது சிறிலங்கா இராணுவத்திற்குப் பெரும்நெருக்கடியை உண்டுபண்ணும் எனத் தெரிவிக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ். மீதான தாக்குதலில் படையினர் உறுதியாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ராணுவநடவடிக்கையை முன்னெடுப்பதில்முக்கியஇடம் வகித்த வடபகுதி தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மற்றும்ஏனைய முக்கியத்தவர்கள் கொல்லப்பட்டபோதிலும் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படுமென இராணுவ உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதில் இராணுவத்தினர் விருப்பம்காட்டியதுடன் முன்நிற்கின்றனர் என்றும், இந்த இராணுவ நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்குவதில்லை என்று அவர்கள்உறுதியளித்துள்ளனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா வடபகுதிக்குச் சென்றபோதே இந்த வாக்குறுதியை இராணுவத்தினரிடம் இருந்து பெற்றதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## அதிகாரிகள் மரண விசாரணைக்கு

## ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் குழு

(கொழும்பு)

அராலியில் இம்மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் 10 இராணுவ மற்றும் கடற்படை உத்தியோகத்தர்கள் கொல்லப் ... ரித்து அறிக்கை சமர்ப்பிக்க முன்னாள் நீதியரசர் ஒருவர் தலைமையிலான விசாரணைக் குழு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவினால் நியமிக்கப்

## கொப்பேகடுவவின் இறுதிக்கிரியை அரசியல் வட்டாரத்தில் சர்ச்சை

(கொழும்பு)

ஊர்காவற்துறை - அராலித்துறை கண்ணி வெடியில் கொல்லப்பட்ட வடபிராந்திய தளபதிலெப்டினன்ட்ஜெனரல் டென்சில் கொப்பே கடுவவின் இறுதிக்கிரியைகள் குறித்து கொழும்பு அரசியல் வட்டாரங்களில் சர்ச்சை ஏற்பட்டது.

அவரின் இறுதிக்கிரியைகளை இருதினங்கள் கழித்து செய்திருக்கலாம் என ஒரு பிரிவினர் கருத்துத் தெரிவித்திருந்தனர். அவரின் தகனக்கிரியைகளை சுதந்திர சதுக்கத்தில் நடத்த வேண்டும், கனத்தையில் இடவசதி போதாது என்று வேறொரு பிரிவினர் கோரியிருந்தனர்.

ஆனால் இதுகுறித்து கருத்துத் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, டென்சில் கொப்பே கடுவவின் மனைவியின் விருப்பத்தின் பேரிலேயே மரணச்சடங்குகள் இடம்பெற்றதாக கருத்துத் தெரிவித்தார்.

அத்துடன் இறுதிச் சடங்குகள் பெரிய ஆடம்பரமின்றியும் எளிமையாகவும் விரைவில் நடத்தப்பட வேண்டும் எனவும் திருமதி கொப்பேக் கடுவ விரும்பினார்.

கொப்பேக்கடுவ குடும்பத்தினர் குடும்பத்தில் அடுத்தடுத்து நிகழ்ந்த மரணங்களினால் பெரும்வேதனைக்குள்ளாகியுள்ளனர் எனவும் மேலும் தெரிய வருகிறது.

## பிரேமதாசாவின் ஆலோசகர் நையப்புடைக்கப்பட்டார்

கனத்தை பொதுமயானத்தில் இடம்பெற்ற கொப்பேகடுவவின் இறுதிச்சடங்குகளில் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு நெருக்கமான ஆலோசகர் தயான் ஜெயத்திலகா தாக்கப்பட்டார். இவர் தாக்குதலினால் ஆடையில்லாத நிலையில் காணப்பட்டதாகவும் பார்வையாளர் கூறுகின்றனர்

அரசுக்கு மிகவும் வேண்டியவர்களான இரு பௌத்தபிக்குகளும் கடுமையான தாக்குதலுக்குள்ளாகினர்.

நிலைமை மோசமாகி வெளிநாட்டுத்தூதுவர்களில் நான்கு பேர் அவசரமாக மயானத்தை ... தெரிவிக்கப்படுகிறது.

கல்லெறிபட்டு வெளிவிவகாரத் துணை அமைச்சர் ஜோன் அமரதுங்காவும் காயமடைந்தார்.

சிலர் தண்டவாளங்களில் உள்ள இரும்புப் பாளங்களை கழற்றித் தாக்க முயற்சித்தனர் என்றும் கூறப்படுகிறது.

இறுதி ஊர்வலத்தின்போது அரசுக்கு எதிரான கோஷங்களும், தமிழருக்கெதிரான கோஷங்களும் எழுப்பப்பட்டன.

சுமார் ஓர் இலட்சம் பேர் இறுதிச்சடங்குகளில் கலந்து

கொப்பேகடுவ மற்றும்ஏனைய முக்கியத்தவர்கள் கொல்லப் பட்டபோதிலும் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடி க்கை தொடர்ந்து மேற்கொள் வடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதில் இராணுவத் தினர் விருப்பம்காட்டியதுடன் முன்நிற்கின்றனர் என்றும், இந்த இராணுவ நடவடிக்கை வடபகுதிக்குச் சென்றபோதே இந்த வாக்குறுதியை இராணு வத்தினரிடம் இருந்து பெற்ற தாகவும் அந்த அதிகாரி தெரி வித்தார்.

அராலியில் இம்மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் 10 இரா ணுவ மற்றும் கடற்படை உத் தியோகத்தர்கள் கொல்லப் பட்ட சம்பவம் பற்றி விசா முன்னாள் நீதியரசர் ஒருவர் தலைமையிலான விசாரணைக் குழு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவினால் நியமிக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

களும் கடுமையான தாக்கு தலுக்குள்ளாகினர்.

நிலைமை மோசமாகி வெளி நாட்டுத்தூதுவர்களில் நான்கு பேர் அவசரமாக மயானத்தை விட்டு வெளியேறினர் என்றும் கோஷங்களும் எழுப்பப்பட் டன.

சுமார் ஓர் இலட்சம் பேர் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டார்கள் எனத் தெரி விக்கப்படுகிறது.

# 116நாட்களில் 586 படையினர் புலிகளின் தாக்குதலுக்கு பலி

## 340 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

ஏப்ரல் பதினைந்தாம் திகதி முதல் ஆகஸ்ட் எட்டாம் திகதி வரையான நூற்றுப்பதி னாறு நாட்களில், சிறிலங்கா இராணுவத்தின் வடமாகாண தளபதி மேஜர்ஜெனரல் டென் சில் கொப்பேகடுவ, கடற் படை உயர்மேலாளர் கொமா ண்டர் மொகான் ஜயமகா, பிரிகேடியர் விஜயவிமலரட்ண உட்பட ஐந்நூற்றி எண்பத்தி ஆறு இராணுவத்தினர் கொல் லப்பட்டுள்ளனர் என விடுத லைப் புலிகளின் உத்தியோக பூர்வ ஏடான 'விடுதலைப் புலி'களில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்த நாட்களில் இராணு வததினரிடமிருந்து முந்நூறு தானியங்கித் துப்பாக்கிகள், இருபத்தைந்து இலகு இயந் திரத் துப்பாக்கிகள், எம் 203 ரக பிஸ்டல்கள் ஐந்து, ஆர். பி ஜிகள் நான்கு. 60 எம். எம் மோட்டர்கள் நான்கு, 81 மி மீ மோட்டர் ஒன்று, எல் 3-2 என்பன உட்பட முந்நூற்று நாற்பதுக்கும் அதிகமான ஆயுதங்கள் புலி களால் கைப்பற்றப்பட்டுள் ளன இவை தவிர சிறிலங்கா இராணுவம் இருபத்தியிரண்டு கவச வாகனங்களையும், நான்கு போர்த் தாங்கிகளை யும், மிகப்பெரும் வை-8 ரக விமானத்தையும் இழந்துள் ளது.

இக்காலப் பகுதிக்குள் புலி களின் தரப்பில் இருநூற்றி ஐம்பத்தெட்டுப் போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண் டதோடு இருநூற்றிஎழுபத்தி இரண்டு தமிழ்மக்களும் கொல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் பாதுகாப்பு தீவிரம் கலகம் வெடிக்கலாமென அச்சம்

## இன்றுமூன்று அதிகாரிகளின் இறுதிக்கிரியை

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் விஜய விமலரெட்னாவின் மரணச் சடங்கு நடைபெறும் போது லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மரணச் சடங்குகளில் ஏற்பட்டது போன்ற வன்செயல்கள் இடம் பெறலாம் என்று முப்படை களின் உயர் அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளதாக அவுஸ்திரேலிய வானொலி அறிவித்தது.

அரசுக்கெதிராக வன்முறை வெடிக்கலாம் என்று கருதிக் கொழும்பில் பாதுகாப்பு நட வடிககைகள் பலபபடுத்தப் பட்டுள்ளன மேலும் தமிழர் வாழும் பகுதியில் தாக்குதல் கள் நடத்தப்படலாம் என்று கருதி அப்பகுதிகளிலும் பாது காப்பு நடவடிக்கைகள் தீவிர மாக்கப பட்டுள்ளன.

இதேவேளைமேஜர்ஜெனரல் விஜய விமலரட்ன, ரியர் அட் மிரல் மொசான் ஜயமகா ஆகியோரின் மரணச் சடங்கு கள் கனத்தையில் இடம் பெறும் எனவும்,

கேணல் எச்.ஆர். ஸ்டீபனின் மரணச்சடங்கு கண்டி மகியாவ மயானத்திலும் நடைபெறும் எனத் தெரிய வருகிறது.

நேற்று முன்தினம் லெப். ஜெனரல் டென்சில் கொப்பே கடுவவின் இறுதிக்கிரிகையின் போது அமைச்சர்கள் மீது கற் கள் வீசப்பட்டதும் அரசிற் கெதிராக மக்கள் கோஷங் களை எழுப்பி கலாட்டாவில் இறங்கியதும் தெரிந்ததே.

---

## யாழ். குடாநாட்டிற்கு மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா?

(கொழும்பு)

யாழ். குடா நாட்டுக்கு பொறுப்பாக மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா நியமிக்கப்பட லாம் என சிறிலங்கா இரா ணுவ வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன

# 20தொன் வெடிப்பொருள்கள் சடலில் கொட்டப்பட்டன

(கொழும்பு)

சிறிலங்கா படையினரால் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் இருபது தொன் வெடிப் பொருள்கள் பாவனைக்கு உத வாதவை எனத் தெரிவிக்கப் பட்டு கடலில் கொட்டப் பட்டது.

இவ்விவகாரம் குறித்துபாது காப்பு அதிகாரிகள மத்தியில் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: அண்மையில் காலிப்பகுதிக்கு அருகாமையில் பல்லாயிரக் கணக்கான ரவை கள் மற்றும் வெடிமருந்துகள் கண்டெடுக்கப்பட்டன.

இது குறித்து கருத்து வெளி யிட்ட சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இவை கடந்த யூலை 31 ஆம் திகதியன்று சிறி லங்கா கடல் எல்லையினுள் கடற்படையினரால் புதைக் கப்பட்டவையென தெரிவித்தி ருந்தன பத்து தொடக்கம் இருபது தொன் வரையுள்ள வெடிமருந்துப் பொருள்கள் பல்லாயிரக் கணக்கான ரவை கள் என்பன இவ்வாறு புதைக் கப்பட்டவற்றுள் அடங்கும்.

இப்பொருள்கள் காலித் துறைமுகத்திலுள்ள ஒரு பகுதி யில் சில காலததிற்கு முன்பாக தற்காலிகமாக சேமிக்கப்பட் டிருந்ததாகவும் தெரிய வரு கின்றது எனினும் இவற்றை

(4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில்

## ரோந்து சென்ற பொலிஸ்பலி; புலிகளால் ஆயுதம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் துவிச்சக் கர வண்டியில் ரோந்து சென்ற பொலிசார்மீது விடுத லைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு பொலிசார் கொல்லப்பட்டதுடன் இவரி டமிருந்த ஆயுதமும் புலிக ளால் கைப்பற்றப்பட்டன.

கடந்த ஆறாம் திகதிகாலை மட்டக்களப்பு புகையிரத நிலையத்திலிருந்து பெரிய உப்போடை பக்கமாகசென்ற பொலிசார் மீதே புலிகள் இத் தாக்குதலை மேற்கொண்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிடம் நிரப்ப நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்ட அரச நிறுவனங்களில் உள்ள எழுது வினைஞர் வெற்றிடங்களை அமையஅடிப்படையில் நிரப்பு வதற்காக கடந்த 15ஆம்திகதி மன்னாரில் நடத்தப்பட்ட பரீட்சையில் 101 பேர் சித்தி யடைந்துள்ளனர். என்றும் இவர்களில் 45 பேருக்கு கட ந்த ஒகஸ்ட் 1ஆம் திகதிமுதல் நியமனங்கள் வழங்கப்பட்டு ள்ளது என்றும் மன்னார் அர சாங்க அதிபர் க. கணேஸ் தெரிவித்துள்ளார்.

# புலிகள் பார்வையில் தப்பவே ஒரே ஜீப்பில் ஏறினராம்

## உடன் சென்ற மேஜர் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கண் காணிப்பிலிருந்து தப்பவே சிறி லங்கா இராணுவ உயர் அதி காரிகள் அனைவரும் ஒரே வாகனத்தில் சென்றனர் என கடந்த சனி கிழமை விடுத லைப் புலிகள் தீவகப் பகுதி யில் மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் உயிர் தப்பிய இராணுவ மேஜர் ஒரு வர் தெரிவித்ததாகக் கொழும் புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

இதுதொடர்பாக அப்பத்தி ரிகையில் மேலும் தெரிவிக்கப் படடுள்ளதாவது,

கண்காணிப்பு நடவடிக்கை களை மேற்கொள்வதற்காக உயர் அதிகாரிகள் அனைவரும் முதலில் தனித்தனி வாகனங் களிலேயே சென்றனர். தங்க ளது பணியை முடித்துவிட்டு இவர்கள் தளத்திற்குத் திரும் பிக்கொண்டிருக்கையில் முதல் வாகனத்தில் மேஜர்கள் ரஞ் சித்ரூபசிங்காவும், ரோஹான் இந்துநபேவாவும் பயணம் செய்தனர் அந்தவாகனத்தை நிறுத்துமாறு பிரிகேடியர் விமலரத்ன கூறினார். கணிச மான அளவுநேரம்இப்பகுதியை தாங்கள்சுற்றிப்பார்வையிட்ட தையும், தனித்தனியாக வாக னங்களில் வந்ததையும்புலிகள் அவதானித்திருக்கக் கூடும் என்று கருதிய அவர் உயர் மட்ட அதிகாரிகள் சகலரை யும் முதலில்சென்ற வாகனத் திலேயே ஏறுமாறு கேட்டுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து உயர் அதிகாரி கள் அனைவரும் முதல் வாக

(4ஆம் பக்கம் பார்க்க)

**கானகம் பூப் பூத்தால்**
**வானகம் நீர் பூக்கும்**

# வரி விளம்பரம்

### புதிய மீரா நாவல்

1992 இல் வெளிவந்தவை ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' (வாமதேவன்) ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' (சிதம்பர திருச்செந்திநாதன்) ''விண்ணில் அல்ல விடிவெள்ளி''(தாமரைச் செல்வி) யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. (2952)

### விற்பனைக்கு

வீடியோ கமராவுக்குரிய ஸ்ரான்டுகள் இரண்டு, லென்சுகள் நான்கு, *Rechargable Batteries* இரண்டு நஷனல் கசற் றேடியோக்கள், Rs. 3000/- ற்குட்பட்டவை. *Casio Data Bank* . G Rs. 6750/- சீக்கோ ஒட்டோமற்றிக் கடிகாரங்கள், இருபாலருக்குமுரியது. பெறுமதி Rs. 3000/- ஏறத்தாழ Rs. 1750/- க்கு பெற்றுக் கொள்ளலாம். டில்கா வாச் வேக்ஸ், யாழ்ப்பாணம். (2994)

### வாங்கலாம் விற்கலாம்

பாவித்த தரமான கடிகாரங்கள் மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். உங்கள் மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும். மணிக்கூடுகள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம் மணிக்கூடுகளுக்கான சகல பற்றரிகளும் எம்மிடம் உண்டு. டில்கா வாச் வேக்ஸ் 284. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (2993)

### போட்டிப்பரீட்சை

(வேலணை)

யாழ் குடாநாட்டில் இருந்து கிராமசேவை அலுவலர் பதவிக்கென விண்ணப்பித்தோர்களுக்கான பரீட்சைகள் இம்மாதம் 27ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற விருப்பதாகவும், அதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டு வருவதாகவும் இப்பரீட்சைக்கு கிட்டத்தட்ட நாலாயிரம் பேர்கள் வரை விண்ணப்பித்திருப்பதாகவும் யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர்திரு. இரா சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (14)

---

தச்சுத் தொழிலாளர் சங்கப் பொதுக்கூட்ட

## அறிவித்தல்

மேற்படி சங்கப் பொதுக் கூட்டமும், நிருவாக சபைத் தெரிவும் எதிர்வரும் 16-08-92 அன்று காலை 9 00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது என்பதைச் சகல தச்சுத் தொழிலாளர்களுக்கும் அறியத் தருகிறோம். யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் இணைப்பாளர் தெரிவும் இடம்பெறும்,

(3005) இடைக்கால நிருவாகக் குழு

---

யாழ்ப்பாண மாநகரசபை JAFFNA MUNICIPAL COUNCIL

யாழ்ப்பாண மாநகரசபை

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கடைகளுக்கு யாழ் மாநகரசபை ஆணையாளரால் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 100/-ம் கேள்விப் பிணைப்பணம் ரூபா 2500/- உம் செலுத்தி கேள்விப் படிவங்களை நல்லூர் பிரதான அலுவலக நானாவித இறைவரிப்பகுதிக் கிளையில் 20-08-92 வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்படிவங்கள் 21-08-92 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணிக்கு முன் இன்ன இலக்க கடைக்கான கேள்வி எனக் குறிப்பிட்டு இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் பி.ப 2 30 மணிக்கு திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி பிரசன்னமாக இருக்கலாம். மேலதிக விபரங்களை நானாவித இறைவரிக்கிளையில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

| கடைகளின் விபரம் | மாதவாடகை | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை. |
|---|---|---|
| அ) பெரியகடைப்பகுதி சத்திரச்சந்தைக்கடை இலக்கங்கள். | 168.75 | 7500/- |
| 8,11,13,14,15,16 17,18,19,20,21,22 27,29,31,33,35,36 37,38,39,40,42,50 53,55,56,57,58 | | |
| ஆ) நல்லூர் கடை இல. 64 | 119.00 | 15100 - |

மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம்.
10.08.1992 [சி 4873]

மாநகரஆணையாளர், யாழ் . மாநகரசபை

---

# நினைவு கூருகின்றோம் 1992 - 08 - 12

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட அட்டூழியங்களின்போது படுகொலை செய்யப்பட்ட 6 தமிழர்கள்

1985 ஆம் ஆண்டு திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

★ ஈசி [பொன்னுத்துரை நவரட்ணராஜா - மேன்காமம், கங்குவேலி, மூதூர், திருக்கோணமலை]

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவு பழம்பாசிப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் தீப்** [விசுவலிங்கம் கேதீஸ்வரன் - திரியாய், திருக்கோணமலை]

**கிரன்** [வன்னியசிங்கம் உமாசங்கர் - குமுழமுனை, மணலாறு]

முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் -

**கப்டன் தினேஷ்** [மரியஞானேந்திரன் தம்பிநாயகம் தமிழ்ச்செல்வன் - உருத்திரபுரம், கிளிநொச்சி]

சண்டிலிப்பாயில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட மாகியப்பிட்டியைச் சேர்ந்த தமிழ் இளைஞன் -விளானில் சுட்டுக் கொல்லப்பட்ட சங்கானை மேற்கைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - வல்வெட்டித்துறையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கொண்டல்கட்டையைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1990 ஆம் ஆண்டு அம்பாறை நிந்தாவூர்ப் பகுதியில் ''ஜிகாத் குழுவினர்'' மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**பிலிப / திலீப்** [பொத்துவில், அம்பாறை]

**சந்துரு / ரவி** [நிந்தாவூர், அம்பாறை]

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**சேவியர்** [ஜூலியஸ் டயஸ் யோகரத்தினம் - செபஸ்ரியன் வீதி, பனங்கட்டிக்கொட்டு, மன்னார்]

அம்பாறையில் இனந்தெரியாத குழுவொன்றினால் கடத்திச்செல்லப்பட்டுக் காணாமல் போன மத்தியமுகாம் 4-ஆம் குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன.

மட்டக்களப்பில், இனந்தெரியாத குழுவொன்றினால் சுட்டுக்கொல்லப்பட்ட களுவங்கேணியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன் தன்னாமுனை வந்தாறுமூலை - மாவடிவேம்பு, எல்லைநகர்ப்பகுதி. ஏறாவூர், சம்மாந்துறை மற்றும் பல பகுதிகளில் இதே தினத்திலிருந்து இரு நாட்களாக சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது படுகொலை செய்யப்பட்ட 82-க்கும் மேற்பட்ட தமிழர்கள் - துறை நீலாவணைப்பகுதியில் 'ஜிகாத்குழுவினரால்' சுட்டுக்கொல்லப்பட்டு ரயர் போட்டு எரிக்கப்பட்ட ஐந்து இளைஞர்கள் உட்பட 60 தமிழர்கள் ஏறாவூர் மருத்துவமனையில் சிறிலங்கா இராணுவத்தினரால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட 8-தமிழர்கள்.

1991-ம் ஆண்டு அம்பாறை மத்திய முகாம் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். விவேக்** (உதயகுமார் 3-ம் குறிச்சி உதயபுரம், பெரியகல்லாறு, மட்டக்களப்பு)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**தினேஷ்** [இராசதுரை ரவீந்திரமோகன் - கற்கோவளம், பருத்தித்துறை]

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்புஇயங்கிய காலத்தில், அதனுடன் இணைந்து செயல்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்


[சி/4872]

---

45 ஆம் நாள் நினைவு அஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பிதழும்

தாயின் மடியில் 13 — 01 — 1966



தாயக மடியில் 29 — 06 — 1992

## மேஜர் அழகன்

(செல்வராசா இளங்கோ)

''வீரவேங்கைகளின் வெற்றிச் செய்திகளை எல்லாம்
திரமாய்த் தேடித் தேடித் தினந்தோறும் பரப்புகின்ற
ஈழநாதத்தின் பொறுப்பையேற்ற எம்மகன் இளங்கோவே
ஆழமாய் உள்ளே சென்று உன் உயிரைக் குடித்ததோ
அந்நியன் செல்துண்டு ஒன்று ஐயா''

12-08-92 புதன்கிழமையாகிய இன்று அந்தியேட்டி கிரியைகள் நடைபெற இருப்பதால், ஈழநாதத்தைச் சேர்ந்தோர், போராளிகள், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி


கல்வயல் சாவகச்சேரி,

அழகனின் நினைவைச் சுமக்கும். அன்புக்குடும்பத்தினர் (சி-4807

---

# நினைவில் நீ நீங்காமல் நிதமும் எம்முடன் வாழ்கிறாய்

# நினைவில் நீ நீங்காமல் நிதமும் எம்முடன் வாழ்கிறாய்



## மேஜர் அழகன் (செல்வராசா இளங்கோ)

**உனை நினைக்கும் போதெல்லாம் எமை மறந்து கசிகிறோம்**
**கண்ணின் மணியாய் நாதத்தின் கீதமாய் நமக்கெல்லாம்**
**நம்பிக்கை நட்சத்திரமாய் இருந்த நீ இன்று......**
**நம்மிலிருந்து நீ பிரிந்து நாட்கள் நாற்பத்தைந்தைக் கடந்தாலும்**
**நாம் பழகிய நாட்கள் என்றும் பசுமையடா.**

(சி/4870)


| **எழிலகம்** | **மின் வளம்** | **படமாடம்** | **சுவையருவி** |
|---|---|---|---|
| மணிக்கூட்டு வீதி,<br>யாழ்ப்பாணம். | இல, 81 கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம், | இல. 5 மின் நிலைய வீதி,<br>யாழ்ப்பாணம். |

தாயகம் நோக்கிய பயணத்தில்

## மேஜர் அழகன் (செல்வராசா இளங்கோ)

வித்தாய் விழுந்த

## நாற்பத்தைந்தாம் நாளில்



**தாயின் மடியில்**
**13-01-1966**

**தாயகமண்ணில்**
**29-06-1992**

நட்புக்கு இலக்கணமாய் நயமுடன்
பழகிடும் எங்களின் அழகனே !
கட்டைக்காடு ஆவி கவர்ந்திட
கண்ணீர் விட்டு நாம் கதறிட வைத்ததே !


கொட்டிடும் குருதியால் இம்மண் சேறாக
விட்டே சென்றாயோ ? தமிழீழ
நாட்டினை மீட்கும் நாளது வரையில்
உன்பணி தொடர உறுதி ஏற்கிறோம்.

**கங்கா என்டர்பிரைசஸ்,**
358, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4858)

## பொய்யாகிப் போகாதோ நின் மறைவு

# எம் அழகா!



## மேஜர் அழகன்

## (செல்வராசா இளங்கோ)

வீரஜனனம்
13 - 01 - 1966

வீரச்சாவு
29 - 06 - 1992

இன்முகம் காட்டி என்றும் அன்புடன் பழகி வந்த எம் மன்னனாம் அழகன் மண்மீட்பில் மடிந்தான் என்ற செய்தி பொய்யாகிப் போயிடாதோ? என்றே உள்ளமது ஏங்கி நிற்கச் செய்கிறோம் உன்பணியை என்றும் எண்ணமது ஈடேற.


**ராஜு ஸ்ரோர்ஸ்**
67, 69,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(சி/4857)

## பழகும் பண்பால் மனதில் நிலைத்த

# பழகும் பண்பால் மனதில் நிலைத்த

# மேஜர் அழகன்

## (செல்வராசா இளங்கோ)



தாயின் மடியில்

**13 - 01 - 1966**

தாயக மண்ணில்

**29 - 06 - 1992**


பழகுவதற்கு இனிய பண்புடையாய்
இளகிய நன் மனத்தாய் - இன்குணத்தாய்
அழகிய உருவுடையாய் எம் அழகா!
அழ வைத்தே ஏன் சென்றாய் நண்பா!!

(இ/4853)

— நண்பர்கள்

# மேஜர் அழகன்!

## என்று இனி உன்னைக் காண்போம்



தாயின் மடியில்
13-01-1966
!
!
தாயக மண்ணில்
29-06-1992

சின்னஞ் சிறு வயதிலும்
சிறந்த பெரும் பணியேற்று
மன்னவன் போல் இருந்தாயே!
மறைந்தாயே திருமென்று,
என்னவென்று நாம் சொல்வோம்
எம் இதயம் கொண்ட துயர்
பொன்னெனவே போற்றும்உன்னை
என்று இனிக் காண்போமோ?

செல்வராசா இளங்கோ

## நியூ லலிதா ஜுவல்லர்ஸ் ஸ்தாபனத்தினரும் ஊழியர்களும்

74/1, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்

(சி-4852)

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல. 255, மின்நிலைய வீதி
யாழ்ப்பாணம்

A. S. வேதநாயகம்
இல. 82, கண்டி வீதி

## ஈட்டியால் இதயம் பிளந்ததுபோல் நின் பிரிவு வேதனையை தருகிறதே



ஏ. எஸ். நடராசா
இல. 01. பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்

சிவா ஸ்ரோர்ஸ்
இல. 735, கே.கே.எஸ்.வீதி

இல. 82, கண்டி வீதி
சுண்டிக்குளி
யாழ்ப்பாணம்

**N. ஜெயரட்ணம்**
இல. 444, நாவலர் வீதி
செட்டித்தெரு சந்தி
யாழ்ப்பாணம்


**சாந்தி விலாஸ்**
இல. 143, கஸ்தூரியார் வீதி
கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்

**கைலாசபிள்ளை உதயகுமார்**
இல. 475, மணிக்கூட்டு வீதி
பெருமாள் கோவிலடி
யாழ்ப்பாணம்

**ஏ. எம். ஆர். சகோதரர்கள்**
இல. 384, கோவில் வீதி
நல்லூர்

**குருநாதர் சக புத்திரர்கள்**
சட்டநாதர் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்

**சபா ஸ்ரோர்ஸ்**
இல. 778, சிவன்வடக்கு வீதி
வைத்தீஸ்வரா முன்பாக
யாழ்ப்பாணம்



# மேஜர் அழகன்

## (செல்வராசா இளங்கோ)

காலத்தை அனுசரித்து கண்ணியமாய் கடமை செய்து - அன்று
பாலத்தில் எல்லோ நடமிட்டாய் எம் அழகா!
ஞாலத்தை பிரிந்துவிட்ட ஞாயிறு நீ - நின் அழகு
கோலத்தை நாம் இனியும் காண்போமா?

(சி/4851)

இல. 735, கே.கே.எஸ்.வீதி
இந்துக்கல்லூரியடி
யாழ்ப்பாணம்

**தவம் ஸ்ரோர்ஸ்**
இல. 1004, கே. கே. எஸ். வீதி
நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்

**தங்கம்ஸ்**
இல. 635, பருத்தித்துறை வீதி
முத்திரைச் சந்தியடி
நல்லூர் – யாழ்ப்பாணம்

**அம்பிகா றேட் சென்ரர்**
இல 362, சென்ரல் நேசிங்கோம் சந்தி
யாழ்ப்பாணம்


**சிவன் ஸ்ரோர்ஸ்**
இல. 340, கம்பஸ் சந்தி
யாழ்ப்பாணம்

**சசிகாந்தன் களஞ்சியம்**
இல. 193, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

**அரன்ஸ்**
இல. 100, அரசடி வீதி
யாழ்ப்பாணம்

எண்ணத்தில் என்றும் நிறைந்த

# மேஜர் அழகன்



செல்வராசா இளங்கோ

தாயின் மடியில்
**13-01-1966**

தாயக மண்ணில்
**29-06-1992**

போராளி என்றாலும் பொறையுடையாய்
பொல்லாங்கு இல்லா மனமுடையாய்
நீராள இலங்குகின்ற உலகமிதில்
நின்போன்ற இன்குணத்தான் கண்டிலையே!
சீரான உன்பேச்சும் சிரிப்பும்
யாராலே முடியுமப்பா உன்னையன்றி!
என்னத்தை யாம் சொல்வோம்-எம்
எண்ணத்தில் வாழ்கிறாய்

## ராதிகா ஜுவல்லர்ஸ்

ஸ்தாபனத்தினரும் ஊழியர்களும்
(தங்க பவுண் நகை வியாபாரம்)
222, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


(சி/4854)

# இனி உன்னைக் காண்பது எக்காலம்!

## எம் அழகா!

அக்கா! என அழைத்து
அன்போடு நாடி வந்து
மிக்க நகை மொழி பேசி எம்குடும்பம்
மீதில் ஒருவன் ஆனாய்
திக்கென்று போட்டுதப்பா
திடுமென்ற நின் மறைவு
விக்கி அழுது விம்மித் தவிக்கின்றோம்
எக் காலம் இனி உன்னைக் காண்போம்
அழியாது உன் நினைவு எம்
வாழ்வில் எந் நாளும்

**குளோபல் எஞ்சினியரிங்**
**டெக்னோல்ஜி சேர்விஸஸ்**
**32, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**



## செல்வராசா இளங்கோ

**11/1, செம்மணி ஒழுங்கை அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

(சி/4856)

# எந்த நாதத்திலும் இசைக்கப்படுவாய்..அழகா!

வாழமுன் முன் கோழைகள் பலமுறைசாவர்!
வீரரோ சாவிலே ஆயிரமாய் எழுவர்.



நீ
விழுப்புண் தாங்கி
இம்மண்ணிலே சரிந்தாய்!
உன் செந்நீரும்

# நினைவில் நிறைந்து நிற்கும் நாற்பத்தைந்தாம் நாள்

# மேஜர் அழகன்

## (செல்வராசா இளங்கோ)



உன் செந்நீரும்
எம் கண்ணீரும்
இம் மண்ணிலே ஊற
அவை
விடுதலை வித்துக்கள் எழ
உரமாகட்டும்!
எங்கள் இளங்கோவே!
இனி
ஈழநாதத்தில் மட்டுமல்ல
ஈழத்தில் எழும்
எந்த நாதத்திலும்
நீ இசைக்கப்படுவாய்!!

(சி/4867) அருச்சுனா - சந்திரபோஸ்



தாயின்மடியில்
13 - 01 - 1966

தாயகமண்ணில்
29 - 06 - 1992

தமிழ் ஈழம் அமைத்தும் போர்
தரணியில் வளர்த்திடவே
அமிழ்தான உயிர் தந்தவரில்
அழகனுக்கும் ஓரிடமாம்!
தாயகம் நோக்கியபயணம் தொடர...
வித்தாய் விழுந்த வீரர்
தியாகம் நினைவில் நிழலாய் ஆட
இவர் வழி தொடர்வோம்

(சி/4859)
இ. ச. பேரம்பலம் அன் சன்ஸ்
50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

தேசிய அநீதியே தேசிய அழிவிற்கு
நிச்சயமான பாதை
— வில்லியம் கிளேட்ஸ்டோன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## ஆட்சியாளருக்கு ஓர் எச்சரிக்கை

**லெப்** ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் இறுதிக்கிரியையில் கலந்து கொள்ளவந்த சிரேஷ்ட அமைச்சர்கள் மீது ஆவேசம் கொண்ட சிங்கள மக்களும், பௌத்த குருமார்களும் கற்களையும், செங்கட்டிகளையும் வீசினர். இதில் சிரேஷ்ட அமைச்சர் ஏ.ஜே.ரணசிங்கவிற்குகழுத்தில்காயமேற்பட்டது

இதேவேளை டென்சில் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியையில் கலந்து கொள்ளத்திட்டமிட்டிருந்த சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இறுதி நேரத்தில் தனது திட்டத்தைக் கைவிட்டார். மக்களின் மனநிலை அறிந்து தவிர்த்துக்கொண்டார் என்று சொல்லலாம்.

அதாவது, சிங்கள மக்கள் அரசின் மீதுள்ள தமது ஆத்திரத்தை இதன்மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால், சிறிலங்கா அரசியல் வரலாற்றில் சிங்கள அமைச்சர்கள் மீது மக்கள் கற்களையும், செங்கட்டிகளையும் வீசுவதென்பது மிகவும் அபூர்வமான காரியமாகும். சிறிலங்கா அரசியல் வரலாற்றில் இவ்வாறான சம்பவங்கள் மிகவும் அரிதானவையாகும்.

இதேவேளை, இக்கல்வீச்சுச் சம்பவம் பிரேமதாசா அரசாங்கம் மீதான மக்களின் வெறுப்பை மட்டும் காட்டுவதாகக் கொள்ள முடியாது. இக்கல்வீச்சு சிறிலங்கா அரசியல் வளர்ச்சி பரிணாமத்தில் ஏற்பட்ட மாற்றத்தையும் வெளிக்காட்டுவதாகும்.

1983ஆம் ஆண்டு திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டபோது, சிங்களவர்கள் தமது ஆவேசத்தைத் தமிழ் மக்கள் மீது காட்டினார்கள். இதற்கு அரசாங்கமும் உடந்தையாக இருந்தது. தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள், அவர்கள் சொத்துக்கள் தீவைக்கப்பட்டது, சூறையாடப்பட்டது ஆனால், தற்பொழுது சிறிலங்கா இராணுவத்தினரின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்த இராணுவத் தளபதிகளின் இழப்பின்போது சிங்களவர்களின் கோபம் வழமைபோல் தமிழருக்குஎதிராகத்திரும்பியதோடு என்றும் இல்லாதவாறு அரசிற்கு எதிராகவும்திரும்பியுள்ளது.

ஆனால்பிரேமதாசா அரசாங்கமும்இது குறித்துச் சரியான கணிப்பீடு செய்யவில்லை. என்றே தோன்றுகின்றது. அரசாங்கமும் முன்கூட்டியே கணிப்பீடு செய்திருக்குமானால், தமது குண்டர்களைக் கொண்டே மக்களின் கவனத்தைத்திசை திருப்பியிருக்கும். தமிழருக்கு எதிரான வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும்.

# இராணுவத்திற்கு புதிய யுக்திகள் தேவை; புலிகளின் தாக்குதலினால் நிர்ப்பந்தம்

மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவும், அதிகாரிகள் எட்டுப் பேரும், ஒரு சாதாரண சிப்பாயும் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இராணுவம் தனது போர் உத்தியை மாற்றி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டா என்று ஒரு கேள்வி எழுந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை என்று ''சிறிலங்கா இராணுவம் - மறுபரிசீலனை தேவையா?'' என்ற தலைப்பில் அரசன் அருளையா பி. பி. ஸி. ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் குறிப்பிடுகிறார்.

விடுதலைப்புலிகளின் கரந்தடித் தாக்குதல்கள் கடந்த சில நாட்களாக இடம் பெறுகின்றன. அதேவேளை சென்ற வியாழக்கிழமை செய்தியாளர் கூட்டத்தில், சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் - தங்கள் உத்தியில், அதாவது வியூகம் வகுப்பதில் மறு சிந்தனையும், மாற்றமும் தேவை என்பதை ஓரளவு ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

புலிகளின் திடீர்த்தாக்குதல்களுக்கு இடம் கொடுக்காவண்ணம் பதுங்க வேண்டிய நிலையில் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் இவ்விதம் கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நாம் பொதுவாக ஏற்றுக் கொள்ளலாம் என்று அரசன்அருளையா கூறுகிறார்.

இராணுவ உயர் தளபதிகள் தமது சிப்பாய்கள் கும்பல் கும்பலாக எவ்விடத்திலும் நடமாட வேண்டாம் என்றும், புலிகள் அபாயம் மிகுந்த பகுதிகளில்நெடுநேரம்தாமதிக்காமல் கடமையை விரைவாக முடித்துக் கொண்டு முகாம் திரும்பும்படி ஆலோசனை கூறப்பட்டதையும் இத்தருணத்தில் நினைவுபடுத்த வேண்டும். இத்தனை அச்சமிருந்தும் ஊர்காவற்றுறையில் புலிகள் வைத்த கண்ணிவெடிக்கு முக்கியமான புள்ளிகள் இரையாக நேர்ந்திருக்கிறது.

எனவே அடியிலிருந்துமுடிவு வரை தங்கள் இராணுவ உத்தியை, சிந்தனையை சிறிலங்கா இராணுவம் மாற்றி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இப்போது ஏற்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டின் மீது சிறிலங்கா இராணுவம் எடுக்க இருந்த நடவடிக்கை மேற்படி காரணத்துக்காக ஒத்திப் போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக உயிரிழந்த தளபதி கொப்பேகடுவவின் இறுதிச் சடங்கு கொழும்பில் நடந்தது.

புலிகளின் கண்ணிவெடியில் கொல்லப்பட்டகொப்பேகடுவ சிங்களப் பெரும்பான்மைப் பொதுமக்கள் மத்தியிலும் நட்புப் பெற்றவர்.

உண்மையில் கொப்பேகடுவ அவர்கள் எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அன்புக்கும்,அமோக ஆதரவுக்கும் ஆட்பட்டு வந்தவர் என்பதை இத்தருணத்தில்சிறப்பாகக்குறிப்பிடவேண்டும். இராணுவநடவடிக்கைமூலம்தமிழர் நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும் என்பதில் உள்ள அக்கறையால் இந்த ஆதரவு அன்பு என்பதைச் சிறப்பாகக் குறிப்பிடுதல் பொருத்தம்.

எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ அம்மையார் நாட்டு மக்களுக்கு விடுத்த சொந்த வேண்டுகோளில், இத் துயரத்தைப் பிரதிபலிக்க வெள்ளைக் கொடி ஏந்திச் செல்லுமாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

சிறிலங்காஇராணுவத்துக்கு ஒரு சிறு மன நிறைவு கடந்த காலத்தில் இல்லாத மாதிரி விடுதலைப் புலிகளை முன்னேற விடாமல் ஒதுக்கிப் பின்னேதள்ளியதாகவும் அவர்கள் சொல்லுகிறார்கள். அதாவது புலிப்படைக்கு சேதத்தை இந்த காலகட்டத்தில் அவர்கள் உருவாக்கி விட்டதாக அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் இந்த உறுதி கொண்டாடலுக்கு அத்தனை உறுதியான சான்றுகள் இல்லை என்பதையும் பி. பி. ஸி. செய்தியாளர்ஆய்வுரைக்கண்ணோட்டத்தில்குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த ஆண்டு பல புதிய ஆயுதங்கள் சிறிலங்கா இராணுவத்திற்கு வந்தன என்பதைச் சொல்ல வேண்டும். செக்கோசெலேவேக்கியா ரி-55ரகதாங்கிகள், பீரங்கி வண்டிகள், பல ஜெட் போர் விமானங்கள், கடலில் கண்காணிக்கும்ரோந்துப் படகுகள் இப்படி பல வந்தன. இதனால் யாழ். குடாநாட்டை முற்றுகையிட்டு மூடி வைக்கும் நிலைக்கு வந்தாகி விட்டது என்று அரசுக்குத்தித்திக்கும் வகையில் சிறிலங்கா இராணுவம் அவ்வப்போது கூறி வந்திருக்கிறது என்பதையும் பி. பி. ஸி. செய்தியாளர் குறிப்பிட்டிருக்கின்றார்

இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் உள்ளபகுதிகளை விஸ்தரித்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். ஆனால் இராணுவத்தின் அதிரடி வியூக உத்திகள் பத்தாது என்றஆதங்கம்இராணுவதரப்பில் கீழ் மட்டத்திலுள்ள பல இராணுவத் தளபதிகள் மத்தியில் இருந்து வந்ததையும் இங்கே குறிப்பிட வேண்டும் என்றதாலும் ஆரம்ப வசதி, புதிய படைக்கலச் சேர்க்கை உதவி ஏதும் இல்லாவிடில் யாழ்ப்பாணத்தை முற்றாக நிரந்தரமாகக் கட்டியாள முடியாது என்பது இப்போது உணர்த்தப்பட்டிருக்கிறது.

புலிப்படையின் நிலக்கண்ணிவெடிக்குத் தளபதிகள் பலியானது பழைய உத்திகள் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கின்றன எனப் பல அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

புலிப் படையை பொறுத்த வரையில் அதிரடித் தாக்குதலில் அவர்கள் கைதேர்ந்தவர்கள். எனவே தான் சில நாள்களாகக் கும்பல் கும்பலாக இராணுவம் போகவேண்டாம் என்று எச்சரிக்கையும் விடப்பட்டது. சென்ற சனிக்கிழமை இராணுவத்தின் மூன்று ஜீப் வண்டிகளில் வந்த முக்கிய தளபதிகள்,கொப்பேகடுவ உட்பட புலிகளின் கண்ணிவெடிக்குப் பலியானார்கள்.

முன்னேறுவதாயிருந்தால் உரிய ஆள் அம்பு படைக்கல வசதிகளுடன்தான் செல்ல வேண்டும் என்ற முந்திய நிலைப்பாட்டிற்கு ஏன் அவர்கள் செவிசாய்க்கவில்லை என்பது இப்போது, இந்த நிலையில் தொக்கி நிற்கிறது

அரசன் அருளையா எழுதிய ஆய்வுரைக் கண்ணோட்டம் இவ்வாறு கூறுகின்றது.

# கூட்டுமுன்னணி அமைப்பதற்கு அநுரா நிபந்தனை விதிப்பு

(கொழும்பு)

எதிர்க் கட்சிகளின் கூட்டு முன்னணி ஒன்றை நிறுவுவதற்கு முன்னால் அதற்கான உடன்பாட்டை சகல சுதந்திரக் கட்சி எம்பிக்களிடம் இருந்து பெறவேண்டும்.

இவ்வாறு கடந்த திங்கட்கிழமை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற குழுக்கள் எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணி தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் அநுரா பண்டாரநாயக்கா வலியுறுத்தினார்.

முன்னைய கூட்டு முன்னணிகள் தோல்வி அடைய நேர்ந்ததிற்கான காரணங்களை விளக்கிய அவர், தேர்தல் ஒன்று நடைபெறும் பட்சத்தில் கூட்டு முன்னணியில் இடம் பெறும் கட்சிகளுக்கு ஒதுக்கப்படும் ஸ்தானங்கள் குறித்து முன்கூட்டியே உடன்பாடொன்று எட்டப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்தக் கூட்டத்திற்கு பல பாராளுமன்ற உறுப்பினர்கள் சமுகமளிக்காமல் தவிர்த்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

''ஹெல உறுமய'' அமைப்பை கண்டித்து சந்திரிகா குமாரணதுங்கா அறிக்கை

## லெப். ஆனந்தகுமாருக்கு மக்கள் இறுதி அஞ்சலி

8. 8. 92 அன்று காலை 10.45 மணியளவில் பலாலி இராணுவ முகாமின் அச்சுவேலிக் காவலரண் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல் சம்பவமொன்றில் விடுதலைப்புலிகள் போராளியான லெப்டி

இம்மாவீரனின் புகழுடல் நேற்றுமுன்தினம் காலை 9.00 மணிக்கு மக்கள் அஞ்சலிக்காக சித்தன்கேணி கணேசவித்தியாசாலையில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் வைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து மாவீ

## சிங்களம் மட்டும் சட்டமே பிரச்சினைக்கு காரணம்
**–பிரேமதாசா**

(கொழும்பு)

சிங்களம் மட்டுமே அரசாங்க கருமமொழியாக இருக்க வேண்டும் என அளிக்கப்பட்ட வாக்குறுதியிலேயே நாட்டில் இனப்பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்தது என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா எடுத்துரைத்தார்.

தெகிவத்த சந்தியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரேமதாசா மேலும் கூறுகையில், தான் பதவிக்கு வந்ததும் இந்தியாவுடன் கசப்புணர்வுகள் தோன்றாத வகையில் அந்நாட்டுப் படைகளை வெளியேற்றியதாகவும் குறிப்பிட்டார்.

## உதவி அரசஅதிபர் பிரிவுக்கு நேரடியாக நிதி ஒதுக்கீடு

பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் இருபத்தைந்து லட்சம் ரூபா நிதியுதவி இனிமேல் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் நேரடியாக ஒதுக்கப்

கேகாலை மாவட்ட ஐ. தே. கட்சி கிளைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் இந்நிதியானது இனிமேல் மாவட்ட அடிப்படையில் ஒதுக்கப்பட்டு உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு பகிர்ந்த

களைக் கொண்ட மக்களின் கவனத்தைத்திசை திருப்பியிருக்கும். தமிழருக்கு எதிரான வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும்.

இதேவேளை சிங்களவரின்சினம் அரசுமீதுதிரும்பியதற்கு காரணம் தனியாக தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவில்லை என்பதனால் ஏற்பட்டதெனக் கொள்ளமுடியாது 'துட்டகைமுனுக்கள்' இறந்ததினால் ஏற்பட்ட விரக்தியும், மக்கள் அரசிற்கு எதிராகக் கொண்டுள்ள வெறுப்புமே காரணமாகும். ஆனால், இதற்கு வித்திட்டவர்கள் சிங்கள ஆட்சியாளர்களே.

ஏனெனில்'துட்டகைமுனுக்கள்'உருவாவதற்கும், இறப்பதற்கும் காரணமாக இருந்தவர்கள் ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்களேயாகும். ஆனால்,தொடர்ந்தும் சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையே நாடி நிற்பார்களேயானால், மேலும், துட்டகைமுனுக்கள் இறப்பதும் அரசிற்கெதிரான நெருக்கடி வளர்வதும் தவிர்க்க முடியாததாகும்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் மேலும் ஒன்றைக் கவனத்திற்கொள்ள வேண்டும். துட்டகைமுனுக்களின் இறப்புக்களினால் தற்பொழுது சிங்கள மக்களின் ஒருபகுதியினரே எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். இதேவேளை, பல ஆயிரக்கணக்கான கைமுனுக்கள் இறந்த செய்திகளை அவர்களுக்கு அரசாங்கம் மூடிமறைத்துவிட்டது. அல்லது, அதன் பாதிப்புத் தெரியாதவாறு மறைத்துவிட்டது. இதனால் அரசாங்கம் தப்பித்துக்கொண்டுள்ளது.

இதேவேளை, தொடரும் இழப்புக்கள் தனியாக சிங்கள மக்களை மட்டுமல்ல, சிறிலங்கா ஆயுதப் படையினரையும் விரக்தி கொள்ளத் தூண்டும். அதனை 7000 ஆயுதப்படையினர் கடமையில் இருந்து ஓடியதே உணர்த்துவதற்குப் போதுமானதாகும் அவ்வாறு ஆயுதப்படையில் ஏற்பட்டுவரும் விரக்தி கல்வீச்சுடன் நின்று போய்விடக் கூடியதல்ல. சில வேளை, ஆட்சி அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் அளவில் கொண்டு சென்றுவிடக்கூடியதாகும். மக்கள் வெறுக்கும் அரசாங்கத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவது சுலபமாகும். அதாவது தான்வளர்த்த பூதத்தினால் தானே விழுங்கப்படும் அபாய நிலை உருவாகலாம்.

இந்நிலையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், சிறிலங்காவின் அரசியல் பரிணாம வளர்ச்சி சிங்கள அரசியல்வாதிகளை 'தொலைத்து' விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

டன் ஏற்பட்ட மோதல் சம்பவமொன்றில் விடுதலைப்புலிகள் போராளியான லெப்டினன்ட் ஆனந்தகுமார் (பாலசுப்பிரமணியம் தெய்வேந்திரன், சித்தன்கேணி) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

விசேட மேடையில் வைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து மாவீரரின் புகழுடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்டது.

ப்பை கண்டித்து சந்திரிகா குமாரணதுங்கா அறிக்கை வெளியிட்டுள்ளதையும் இக்கூட்டத்தில் வன்மையாக கண்டிக்கப்பட்டது.

யுதவி இனிமேல் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் நேரடியாக ஒதுக்கப்படும் என்று பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

மாவட்ட அடிப்படையில் ஒதுக்கப்பட்டு உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

# பெண் விடுதலை பணம் பறிமுதல்

(வவுனியா)

புளொட் குழுவினரால் வவுனியா நகரில் கைதான பெண்மணி விடுதலை செய்யப்பட்டார்.

சில தினங்களுக்கு முன்னர் லொறி ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட தமது வெங்காயத்தை விற்பனை செய்து பணம் பெற வவுனியா நகருக்குச் சென்ற இப்பெண்மணியை புளொட் குழுவினர் கைது செய்து தடுத்து வைத்திருந்தனர்.

வீ. புவனேஸ்வரி என்ற இப்பெண்மணி இரு நாட்களுக்கு பின்னர் விடுதலைசெய்யப்பட்டார். ஈச்சங்குளம் பகுதியைச் சேர்ந்த இவரின் வெங்காயம் விற்ற பெருந்தொகை பணம் புளொட் உறுப்பினர்களால் இன்னும் வழங்கப்படவில்லை.

# உளவாளிகள் அச்சுறுத்தல் வவுனியாவில் அதிகரிப்பு

[வவுனியா]

வவுனியா நகரில் என்றுமில்லாதவாறு இராணுவ உளவாளிகளின் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன. இதனால் பொதுமக்கள் வவுனியா நகருக்கு ஊடான போக்குவரத்தை மேற்கொள்வதற்கு அஞ்சுகின்றனர்.

அடையாள அட்டைகளை கவனிக்கும் உளவாளிகள், தமது விசாரணைக்கென உரியவர்கள் பலரை தடுத்து வைத்து மிரட்டி விசாரணை செய்கின்றனர்.

இராணுவ உளவாளிகளின் கேள்விகளுக்கு பதில்சொல்ல மறுக்கும் பயணிகள் கொடூரமாகத் தாக்கப்படுகின்றனர்.

வவுனியா நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் இராணுவ உளவாளிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

வடபகுதியில் நிலவும் போர்ச்சூழ்நிலை புலிகளின் நடமாட்டம் நடவடிக்கைகள் பற்றியே உள்வாளிகள் விசாரணை மேற்கொண்டு பயணிகளை அச்சுறுத்துகின்றனர். [தி]

# முல்லையில் பீரங்கித் தாக்கு.

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பகுதியில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகுகள் பல பீரங்கி குண்டுகளை கரையோரம் நோக்கி வீசின. இக்குண்டுகள் முல்லைத்தீவு காட்டுப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததாக தெரிய வருகிறது.

# ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

1992ஆம் ஆண்டிற்கான 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வரும் 23ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணப் பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைகளிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்குப் பின்வரும் பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரனின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலைகளின் மாணவர்கள் யாழ். இந்துமகளிர் கல்லூரி பரீட்சைமண்டபத்திலும் வேலணைக் கொத்தணிப்பாடசாலைகளின் மாணவர்கள் யா/வைத்தீஸ்வராக் கல்லூரி பரீட்சை மண்டபத்திலும், மண்டைதீவுக் கொத்தணிப் பாடசாலைகளின் மாணவர்கள் யா/புனித மரியாள் வித்தியாலய பரீட்சை மண்டபத்திலும், ஊர்காவற்துறை கொத்தணிப் பாடசாலைகளின் மாணவர்கள் யா/ சென். ஜோன்ஸ் அக்கடமி பரீட்சை மண்டபத்திலும் தோற்றவசதி செய்யப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளினது சுட்டிலக்கங்களைச் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் தத் தமது கொத்தணி அதிபர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்

# அதிகாரிகளின் மரணம்; அஷ்ரப் அதிர்ச்சி

ஊர்காவற்துறையில் படை அதிகாரிகள் உயிரிழந்த சம்பவம் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் பலத்த அதிர்ச்சியடைந்துள்ளதாக அஷ்ரப் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்

அவ் அறிக்கையில் மேலும் அவர் அர்த்தமுள்ள பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். தேசியப் பிரச்சினை தீர இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் அதேவேளை அர்த்தமுள்ள பேச்சுவார்த்தையே தீர்வாக அமையமுடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# காபூல்மீதுமீண்டும்தாக்குதல் ஆயிரம்பேர்வரை பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் குல்புதீன் கேக் மத்தியார் தலைமையிலான அதிருப்தியுற்ற முஜாகுதீன் குழுவொன்று ரொக்கட் தாக்குதல் நடத்தியதில் ஆட்களுக்கும் பொருட்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக காபூலில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் சுமார் ஆயிரம்பேர் இறந்திருக்கலாம் என்றும். தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் காபூல் நகரை விட்டு தப்பிச்சென்றுள்ளனர் என்றும் மருத்துவர்கள் ஆஸ்பத்திரியை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# கூட்டம்

தமிழீழக் கல்விமேம்பாட்டுப் பேரவையின் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் பத்து மணிக்குபேரவைச் செயலகத்தில் - நடைபெறும். சகல பேரவை உறுப்பினர்களும் தவறாது சமுகம் தரும்படி செயலாளரால் வேண்டப்படுகின்றனர்.

# பாடு மீன் அணி வெற்றி பெற்றது

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் காந்திஜீ சனசமூக நிலையம் நடாத்தும் 7வீரர்கள் பங்கு பற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து மோதிய பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக்கழக 'பி' பிரிவு அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடக்க முதல் இறுதி வரை வெகு விறுவிறுப்பாக இருந்த இவ் ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் அணி ஆட்டம் முடிவடைவதற்கு 7நிமிடங்கள் இருக்கையில் ஒரு கோலைப் போட்டு தனது வெற்றியை நிச்சயப்படுத்திக் கொண்டது. இப் போட்டிக்கு நடுவராக ஏ. தேவராசா கடமையாற்றினார். (42)

ஈழநாதம்

# கூட்டுப்படை அனுமதிப்போரை கொழும்பு கொண்டு வருகின்றோம்

## - சர்வதேச செஞ்சிலுவை அறிவிப்பு

கூட்டுப் படைத் தலைமை யகத்தினால் அனுமதிக்கப்படு பவர்களும், சிறிலங்கா கடற் படையினரின் பரிசீலனைக்கு உள்ளாக்கப் படுபவர்களும் தான் சர்வதேச செஞ்சிலு வைச் சங்கத்தினரால் கொழும்புக்கு கொண்டுவரப் படுவதாக சர்வதேச செஞ்சிலு வைச் சங்கத்தின் சிறிலங்கா குழுகொழும்பில் கூறியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விடுதலைப்புலி கள் சிலர் சர்வதே செஞ்சிலு வைச் சங்கத்தின் ஏற்பாட்டின் கீழ் வந்ததாக எழுப்பப்பட்ட புகாருக்கு பதிலளிக்கும் வித மாக சிறிலங்காவுக்கான சர்வ தேச செஞ்சிலுவைச் சங்க பொறுப்பாளர் பியரேவெட் டா கருத்துத்தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில் சர்வதே செஞ்சிலுவைக் குழு மனிதாபிமான அடிப்படை யில் நோயாளர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள், மற்றும் பிரிந்திருக்கும் குடும்ப அங்கத் தவர்கள் மீண்டும் குடும்பங் களுடன் இணைவதைச் சாத் தியமாக்கும் வகையிலும், அர சாங்க அதிகாரிகள் ஆகியோரி னது போக்குவரவு ஏற்பாடு களை மட்டுமே கவனிக்கின் றது என்றும் தெரிவித்தார்.

# வெளிநாட்டு மாணவருக்கு கொழும். பல்கலைக்கழகம்

வெளிநாட்டு மாணவர்களுக் காக சிறிலங்காவில் ஒரு தனி யார் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான முன்னேற் பாடுகள் செய்யப்பட்டு வருவ தாகத் தெரிய வருகின்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது இத்தாலியர் ஒருவருடன் கூட்டிணைந்து ''சிலிங்கோ'' நிறுவனம் இம் முயற்சியில் ஈடுபடவுள்ளது ''சிலிங்கோ'' நிறுவனம் இதற் கான அனுமதியை பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவிடம் கோரியுள் ளது.

இப்பல்கலைக் கழகத்தில் பிரதானமாக இத்தாலிய மாணவர்களே சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அதே சமயம் 200 உள் நாட்டு மாணவர்களும் சேர்த் துக்கொள்ளப்படுவர் எனத் தெரிய வருகின்றது.

# தீவுப்பகுதி மக்கள் 12 பேர் யாழ். வந்தனர்

தீவுப் பகுதியில் இருந்து 12 பேர் குமண கப்பல் மூலம் நேற்று 11ஆம் திகதி பருத்தித் துறை துறைமுகத்தை நண் பகல் வந்தடைந்தனர்.

இவர்கள் முன்னர் இங்கி ருந்துதீவுப்பகுதிக்குஅழைத்துச் செல்லப்பட்டவர்கள் எனவும் உறவினர்களைப் பிரிந்து இரு ந்தவர்கள் எனவும் தெரிவிக் கப்பட்டது.

ஆலய பூசகர் உட்பட சிறு வர்கள்பெரியோர்பலரும்இதில் அடங்குவர். (82)

யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
பாடசாலை அபிவிருத்திச்சபை

**பிரதிநிதிகளைத் தெரிதல்**

யாழ் இந்து ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு பெற்றோர் பிரதிநிதிகள் மூவரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம்

16-08-92 ஞாயிற்றுக்கிழமை மு ப. 9.00 மணிக்கும்

பழைய மாணவர்களில் இருந்து மூவரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம்

16 - 08 - 92 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கும் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

ஆ. அரவிந்தநாதன்
அதிபர்.

(சி-4878)

ரோந்து

னர்.

இத்தாக்குதலின்போது ரி56 ரக துப்பாக்கி, ரவைக்கூடு மற்றும் 25 நடுத்தர ரவைகள் ஆகியவற்றை விடுதலைப்புலி கள் கைப்பற்றியுள்ளனர்.

எறிகணை

தொழில் பொருள்களைக் கட லிலேயே கைவிட்டு மயிரிழை யில் தப்பித்து வந்தனரென்று தெரிவிக்கப்படுகிறது. (21

# 30 இந்திய மீனவர்கள் கடற்படையினால் கைது

(கொழும்பு)

மன்னார் தீவுகளுக்கு சமீப மாக மீன்பிடித்துக் கொண்டி ருந்த ஐந்து இந்திய மீன்பிடி றோலர்களும் அதிலிருந்த மீன வர்கள் முப்பதுபேரும் காரை நகர் கடற்படைத் தளத்தைச் சேர்ந்த கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது காரைநகர் கடற்படைத் தளத் தைச் சேர்ந்த கடற்படைப் படகு ஒன்று ஐம்பதுக்கும் மேற்பட்ட இந்திய ரோலர் கள் மீன்பிடித்துக் கொண்டி ருந்ததை கண்டதாகவும். அவர்களை அணுகி விசாரித்த போது மேலும் ஐந்து ரோலர் கள் இன்னும் இருமைல் தூரத் திற்கு முன்னேறியிருந்தது தெரியவந்ததாகவும் கூறப்படு கின்றது. இதனையடுத்து இந்த ஐந்து மீன்பிடி ரோலர் களும் தலைமன்னாருக்கும் பேசாலைக்கும் இடையே கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற் றப்பட்டதாக தெரிவிக் கப்படுகிறது.

இந்திய மீன்பிடி ரோலர் களை சிறிலங்கா கடற்படை கைப்பற்றி காரைநகர் கடற் படைத் தளத்திற்கு கொண்டு வந்துள்ளமை இந்திய மீனவர் களுக்கு ஒரு எச்சரிக்கையாகும் என்று கொழும்பிலுள்ள அவ தானிகள் கருதுகின்றனர்.

# பொலிகண்டி மீனவர்கள் வீடு திரும்பவில்லை

பொலிகண்டியைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் கடந்த நான்கு நாட்களாகவீடுதிரும்ப வில்லையென தெரிவிக்கப்படு கிறது

கடந்த 7 ஆம் திகதி இரவு கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இவ் இளைஞர்களை உறவினர் தேடிவருகின்றனர். இவர்களு க்குஎன்ன நடந்தது என இதுவரை தெரியவில்லை.

இதில் ஒருவர் பொலிகண்டி யைச் சேர்ந்தவரென்றும் மற்ற வர் பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து பொலிகண்டியில் தங்கி வந்தவரென்றும் தெரி விக்கப்படுகிறது. (82)

# மீண்டும் அரசியலில் ஈடுபட பெருமாளுக்கு விருப்பமாம்

கலைக்கப்பட்ட வட-கிழ க்கு மாகாணசபை முதல மைச்சர் வரதராஜப்பெரு மாள் வடகிழக்கில் அரசிய லில் ஈடுபடதனது விருப்பத் தைத் தெரிவித்துள்ளதாக நம் பகமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

அதேசமயம் இந்திய அரசி யல்வாதிகளையும், சிரேஷ்ட அதிகாரிகளையும், வரதரா ஜப்பெருமாளையும் சந்திப்ப தற்காக ஈ. பி. ஆர். எல் எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந் திரன் அண்மையில் இந்தியா சென்றுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

இந்திய சார்பு குழுவான ஈ. பி. ஆர். எல். வடக்குக் கிழக்குப் பிரச்சினை தீர்விற்கு இந்தியா குறிப்பிடத்தக்க பங் காற்ற வேண்டுமென கருது கின்றது.

தற்போது இந்தியாவில் தங் கியிருக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். ஐச் சேர்ந்த சேதீஸ்வரன் மத்திய மற்றும் தமிழக அதி காரிகளையும், அரசியல்வாதி களையும் சந்தித்து வருவதாக

இவர் வடகிழக்கு பிரச்சி னைக்கு தீர்வாக ஏழு தமிழ்க் குழுக்களினாலும் இ. தொ.கா வினால் முன்வைக்கப்பட்ட நான்கு அம்ச சமாதானத் திட்டத்திற்கு இந்தியாவில் ஆதரவு தேடுவதாகத் தெரிய வருகின்றது.

சமாதானத் திட்டம் வட கிழக்கு நிரந்தரமாக இணைக் கப்பட வேண்டும் என்பதை யும் உள்ளடக்கியுள்ளதாய் அறியப்படுகிறது.

அந்நியச்

இந்திய உபகண்டத்தைச் சேர்ந்த நாடுகளுக்கு செல்லும் ஒருவர் எடுத்துச் செல்லும் நாணயமாற்று 100 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது இதன் படி வயதுவந்த ஒருவர் வரு டத்திற்கு 800 அமெரிக்க டாலரையும் சிறுவர் ஒருவர் 400 அமெரிக்க டாலரையும் எடுத்துச் செல்லலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வு

பட்டுள்ளதாய் தெரியவருகின் றது.

# சுதந்திரக்கட்சியின் பிரசார இயக்கம்

(கொழும்பு)

''பண்டார நாயக்காவின் கோட்பாடுகளும் இன்றைய அரசியலும்'' என்ற விடயம் சம்பந்தமாக சிறிலங்காவில் பிரசார இயக்கமொன்று ஒரு வாரகாலத்திற்குள் ஆரம்ப மாக உள்ளதாக தெரியவரு கின்றது

காலஞ்சென்ற எஸ். டபிள்யூ ஆர் டி. பண்டாரநாயக்காவின் நினைவு தினத்தையும் அத் தோடு இணைந்ததாக வரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 41 வது ஆண்டுப் பொதுக்கூட் டத்தையும் ஒன்றாகசெப்ரெம் பர் 2 ஆம் திகதி நுகேகொட வில் நடாத்துவதென்று பண் டாரநாயக்கா ஞாபகார்த்தக் குழு முடிவு செய்துள்ளது.

மேலும் ஐ தே. கட்சிக்கு எதிரானஜனநாயகப் போராட் டங்கள் அனைத்திற்கும் இது ஆதரவாகச் செயற்படுமென மேற்படி குழுவின் செயலாளர் மகிந்த இராஜபக்ஷ விடுத் துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

# வரி விதிப்பில் மாற்றம் உலகவங்கி கோருகிறது

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் வரி விதிப்புகளை உயர்த்துவதை நிறுத்தும்படி உலக வங்கி கண் டிப்பாகக் கோரியுள்ளது உலக வங்கியிடமிருந்து 20 கோடி டாலர்களை கடனுதவியாகப் பெறுவதற்கு உலக வங்கி மேலும் பல கடும் நிபந்தனை களை விதிக்கலாம் என்று நம்ப கரமாகத் தெரியவருகிறது.

தற்போது விதிக்கப்படும் வியாபார மொத்த விற்பனவு வரிக்கு பதிலாக பெறுமதி அடிப்படையிலான வரியொன்றை விதிக்கும்படியும், வரிவிதிப்பை அமுலாக்கும் சட்டபூர்வ வழி முறைகள் இறுக்கமாக்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட லாம்.

# மத்திய அரசுடன் உடன்பாடு எதுவும் இல்லை

அத்வானி—

(கல்கத்தா)

அயோத்தியா பிரச்சினை யில் மத்திய அரசுக்கும், பார தீய ஜனதாவுக்கும் இடையே எந்தவிதமான உடன்பாடும் இல்லையென்று லோக்சபா வின் எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வானி தெரிவித் தார். கல்கத்தாவில் செய்தி யாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் பஞ்சாப், மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலங்களில் மோசமான நிலை அதிகரித்து வருவதாக வும், நாட்டின் பொருளா தாரம் சீர்குலைந்து வருவ தாகவும் குறை கூறினார்.

# பஞ்சாப்பில் 11 பேர் பலி

(டில்லி)

பஞ்சாப்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற துப்பாக் கிச் சூட்டுச் சம்பவத்தில் பதி னொருபேர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமிர்தஸ் மாவட்டத்தின் மஜீநாப் பகுதியிலுள்ள கிராலா கிராமத்திற்கு அதி காலை துப்பாக்கிகளுடன் சென்ற தீவிரவாதிகள் இத் தாக்குதலை செய்தனர் என் றும் இவர்களில் ஆறுபேர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒரு வரின் குடும்பத்தவர்கள் என் றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து பஞ்சாப்பி லும், சண்டிகாரிலும் முக்கிய பிரமுகர்கள் மற்றும் அவர் களது உறவினர்களுக்கு பாது காப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள்

னத்தில் ஏறிக்கொண்டனர்.

இதன்பின்னர் உயர் அதிகாரிகளின் வாகனம் முன்னே செல்ல மற்றைய இரு வாகனங்களில் இரு மேஜர்க ளும் கனிஷ்ட இராணுவத்தி னரும் அவ்வாகனத்தை பின் தொடர்ந்து சென்றனர். இதன் போதே முதலில் சென்ற உயர் அதிகாரிகளின் சென்றவாகனம் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கிச் சிதறியது

# இன்று

(நல்லூர்)

நல்லூர் உற்சவகால தெய் வீக இசையரங்கில் இன்று கெஞ்சிற கச்சேரி நடைபெற வுள்ளது. என். கே. பத்மநாதன் நாதஸ்வரமும் ஆர். ராதா கிருஷ்ணனவயலினும கே. கண் ணதாசன்மிருதங்கமும் ரீ. உத யசங்கர் தவிலும் எஸ் நாக ராஜன் கெஞ்சிராவும்இசைக்க


# 45-ம்நாள் கண்ணீர் அஞ்சலி

# 45-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

## மேஜர் அழகன்

(செல்வராசா
இளங்கோ)

வீரஜனனம்: 13-01-66
வீரச்சாவு: 29-6-92



### நொந்த மனங்களின் நூறு துதி

நீண்ட நெடுப்பார்வை நேத்திரம் நீ கொண்டதனால்
பூண்டு புலிக்கோலம் போன ய் களம் நோக்கி!
பூவாய் மலர்ந்து புகுந்தெங்கள் யாழிந்துக்
காவே களிக்கக் கல்வித்தேன் சிந்துகையில்,
வரலாற்றுக் கடமை வாவென் றழைத்ததனால்
உரமேற்றி நெஞ்சில் உறுமலுடன் புறப்பட்டாய்!
மாற்றான் படைமண்ணில் வந்துலவும் நாட்களிலே
ஊற்றாய் புலனாய் உழைத்திட்டாய் வன்னியிலே.

காவற்கடமை கைகொண்ட ரண்களிலே
நாவற்குழியில் நடந்தாய் நெருப்பாக!
பொன் விலங்காய் வந்து புலியடக்க நின்றவரை
நின்று புயலாகி நீயடித்தாய்! மண்காக்க
எத்தனையாய் நின்றாய்? எதிரிகளை வீழ்த்திட்டாய்!
சத்தியத்தின் வெற்றி தானே சரித்திரமும்?
உத்தமனே அழகா! உன் நெறியும் சத்தியமே!
விதைத்தாய் விடுதலையின் வேட்கை உன் அழகாலே!

விதைத்தாய் விடுதலையின் வேட்கைஉன் அன்பாலே!
விதைத்தாய் விடுதலையின் வேட்கைஉன் ஏட்டாலே!
ஆம் ''ஈழ நாதம்'' அன்னைத் தமிழ்மண்ணில்
நாம் பற்றுக்கொள்ள நயமாய் உழைக்கின்ற
வெற்றிக்கு வேராய் விளங்கிட்ட பணியினிலே,
வெற்றிலைக்கேணி வெங்களத்தில் வீரச்சா
பெற்றாய் எனக் கேட்டுப் பெற்றவராய் நாமழுதோம்!
பற்றாமல் பற்றிப் பலநெஞ் செரிகையிலே.

''மாமா''என் றேயழைத்து மகிழும் வழிச்சிறுவர்,
பூமாலை ஆடப் பொறுத்திருந்த பூவிழியாள்
தமதா ருயிராய்த் தவிக்கும் குடும்பத்தார்
தமதா ருயிராய்த் தழுவீழ நாதத்தார்
குருவாய்நீ இன்றைக்கும் கொண்டாடும் ஆசான்மார்
ஒரு பக்கம் களங்களிலாம் உன் தோழர். மூழ ஈழம்
ஒரு பக்கம் நெஞ்சொடிந்து உக்கித் தளர்கின்ற
பரிதாபம் தனைநீக்கப் பறந்தீழம் மீண்டும்வா!
இந்துப் பழைய மாணவர் சங்கத்தார்
நொந்த மனங்களினால் நூறுதுதி சொல்கின்றோம்!

- யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

---

ஓய்வு

பட்டுள்ளதாய் தெரியவருகின்றது.

இந்தக் குழு சம்பவம் இடம்பெறற பகுதிகள், இச் சப்பவத்தில் கொல்லப்பட்டவர்சள் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை, இச் சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் தரப்பில் ஏதாவது கவனக் குறைவு ஏற்பட்டதா என்பன போன்ற விடயங்களை ஆராயும்.

பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளரான ஆர். எச்.ஹயமான குழுவின் செயலாளராகக் கடமையாற்றுவார்.

---

20 தொன்

பரிசீலித்த இராணுவ ஆய்வாளர்கள் இவை பாவனைக்கு உதவாதவை என்று கூறியுள்ளனர். அதையடுத்து பாதுகாப்பு அமைச்சினால் கடலில் கொட்டுவதற்கு கடற்படையிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

வெடிப் பொருள்களை இவ்வாறு கடலில் கொட்டி விடுவதால் மீன் பிடிக்கோ, கப்பல் போக்குவரத்திற்கோ எந்த ஆபத்தும் இல்லையென்றும் அவ்வட்டாரங்கள் கூறின.

ஆனால் நாடு போரில் ஈடுபட்டிருக்கும் இத்தகையதொரு தருணத்தில் இவ்வளவு பெரும் தொகையான வெடிமருந்து மற்றும் ரவைகள்பயன்படுத்தக் கூடிய நிலையில் இல்லாமலிருப்பது ஏன் என்று சில பாதுகாப்பு ஆய்வாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

---

116 நாட்களில்

லப்பட்டுள்ளனர்.

கிறீன்பெல்ற் - 3, பலவேகய - 2, சண்டமாருதம், சத்பல போன்ற இராணுவ நடவடிக்கைகள் இந்த நூற்றிப் பதினாறு நாட்களிலும் தான் எடுக்கப்பட்டன என்பதுகுறிப்பிடத்தக்கது.

---

தொடர்ந்து சென்றனர். இதன் போதே முதலில் சென்ற உயர் அதிகாரிகளின் சென்றவாகனம் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிச் சிதறியது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வுள்ளது. என்.கே.பத்மநாதன் நாதஸ்வரமும் ஆர். ராதாகிருஷ்ணன வயலினும கே.கண்ணதாசன் மிருதங்கமும் ரீ.உதயசங்கர் தவிலும் எஸ் நாகராஜன் செஞ்சிராவும் இசைக்க உள்ளனர்.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

11-08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கங்கள் - 5224

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:
26-4990, 26-5142, 26-691, 40-5216, 42-3965, 41-4176, 42-1046, 28-9978, 42-3267, 24-3071, 22-4637, 27-7653, 24-4457, 42-3964

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;
28-7261, 27-2088, 27-5045, 27-1189, 41-9355, 41-2479, 26-594, 28-1992, 26-8382, 22-6691, 28-2145, 36-7144, 36-1114, 26-3321

---

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை சோமசுந்தரம்

(தபால் நிலைய ஊழியர் உரும்பராய்)

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த ஐ. சோமசுந்தரம் அவர்கள் நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற ஐயாத்துரை - அன்னலட்சுமி தம்பதிகளின் மூதத புதல்வரும், பாக்கியலீலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மலர்விழி, எழிலன் (மாணவன் - கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரது அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை 3 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

தகவல்:
சோ. எழிலன்

[சி-4880]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.